Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU
National Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 889

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 180

யாழ்ப்பாணம் ஆடி 27 ஜ: ஆண்டு [20 வியாழக்கிழமை (12-8-71)

12 AUG 1971
UNDERGRADUATE LIBRARY

சகல விதமான
ரேடியோக்களும்
உத்தரவாதத்துடன்
திருத்திக்கொடுக்கப்படும்.
ரேடியோ இன்ஜினியரிங்
வேக்ஸ்
28, பஸார் ஒழுங்கை, யாழ்ப்பாணம்
(பள்ளிவாசலுக்குப் பக்கத்தில்)

# "மாலைகளல்ல; மக்களின் மனஉணர்வே பெரியது



## எனது முடிவை மக்கள் அங்கீகரித்துள்ளனர்"

### பெரும் வரவேற்பைப் பெற்ற திரு. மார்ட்டின் கூறுகிறர்

[ நமது சிறப்பு நிருபர் ]

யாழ்ப்பாணம், வியா.

"யாரும் எவரும் எதைப் பற்றியும் தங்கள் அபிப் பிராயத்தைச் சொல்லலாம். அதற்கு அவர்களுக்கு உரிமையுண்டு நான் அவர்கள் கூறுவதைப் பற்றி எதுவும் சொல்ல விரும்ப வில்லை. நான் செய்தது சரியோ தவறோ எனது மனச்சாட்சியின்படி செய்த முடிவை மக்கள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்டிருக்கிறார்களென்பதை என்னைக் கட்டித் தழுவி முத்தமிட்டும் கூட தங்கள் உணர்ச்சியை வெளிப்படுத்திய மக்களின்மூலம் நன்கு உணர்ந்து கொண்டேன் நூறு இருநூறு மாலைகள் எனக்குச் சூட்டப்பட்டிருக்கலாம்; அதை நான் பொருட்படுத்தவில்லை. மாலைகளை எவரும் காசுக்கு வாங்கலாம் ஆனால் மக்களின் உள்ளத்தையும் அவர்களின் உணர்ச்சியையும் விலைக்கு வாங்க முடியாது. நான் செய்த முடிவு சரியானதென்பதை மக்கள் இதயபூர்வமாக உணர்த்திவிட்டனர்.''

இவ்வாறு யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. வி. எஸ். மார்ட்டின் நேற்று யாழ்ப் பாணம் வந்தபோது நமது பிரதிநிதிக்கு அளித்த பேட்டியில் கூறினர்.

''பத்திரிகை நிருபர்களுக்கு அளிக்கும் பேட்டிகளில் சிலர் தம்மைப்பற்றியும் பிறரைப்பற்றியும் எதுவும்சொல்லலாம். நான் அப்படி எதையும் கூறத் தயாராகஇல்லை'' என்றும் திரு. மார்ட்டின்

(6-ம் பக்கம் பார்க்க)

## கெனமன் முன்னிலையில் மார்ட்டின்--துரையப்பா நாளை குருநகரில் பேசுவர்?

குருநகர் வியா

நாளையாழ்ப்பாணம் வரும் வீடமைப்பு நிர்மாண அமைச்சர் திரு பீட்டர் கெனமன் கலந்து கொள்ளும் வைபவமொன்றில் யாழ்ப்பாணத் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு வி. எஸ். மார்ட்டினும் யாழ்ப்பாண நகரமேயர் அல்பிரட்





தங்கராசா துரையப்பாவும் கலந்துகொண்டு உரையாற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் பலாலி விமான நிலையத்தை வந்துசேரும் அமைச்சர் கெனமன் நாளை பிற்பகல் 4-30 மணிக்கு குருநகர் வீடமைப்புத் திட்டத்துக்கான அத்திவாரக் கல் நாட்டுவார். இக்குருநடைபெறும் வைபவத்தில் தான் திரு. மார்ட்டினும் திரு. அல்பிரட் துரையப்பாவும் கலந்துகொண்டு உரையாற்றுவார்களென எதிர்பார்க்கப்படுகிறது.

புறாணி சென்றுள்ள மேயர் துரையப்பா நாளைக் காலையாழ் நகர் திரும்புவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

அமைச்சர் கெனமனுக்கு குருநகர் கம்யூனிஸ்ட் முற்போக்கு வாலிபர் சங்கமும் வரவேற்பளிக்கவிருக்கிறது: குருநகரில் புதிய அமைப்பில் கட்டப்பட்டுள்ள நான்கு வீடுகளையும் அமைச்சர் சம்பிரதாயப்படி திறந்து வைப்பார்.

13ந் திகதி இரவு காங்கேசன் துறை விருந்தினர் விடுதியில் தங்கியிருந்த பின் சனிக்கிழமை காலை அமைச்சர்கொழும்பு திரும்புவார்.

## மாவை ஆலய வழக்கு

யாழ்ப்பாணம், வியா

மாவை ஆலய வழக்கில் நேற்று எதிர்மனுதாரர் சார்பில் ஆஜரான அட்வகேட் வி. சுந்தரலிங்கம் சட்டப் புத்தகங்களை ஆதாரம் காட்டி நீண்டநேரம் தொகுப்புரை நிகழ்த்தினர்.

இவ்வழக்கு யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றத்தில் திரு. ஏ. வைத்திலிங்கம் முன்னிலையில் மூன்றுவது தினமாக விசாரணைசெய்யப் பட்டது.

இவ் வழக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலுக்குள் செல்வோரை ஆதினகர்த்தா துரைசாமி குருக்கள், வி சுந்தரலிங்கம் ஆகியோர் தடுக்கக்கூடாதென உத்தரவிடுமாறுகோரி அட்டோர்னி ஜெனரலால் தாக்கல்செய்யப்பட்டிருந்தது.

மனுதாரர் சார்பில் அட்வகேட் எஸ் டி குருசாமி; புறக்டர் எஸ் கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானர். எதிர்மனுதாரர் சார்பில் அட்வகேட் வி சுந்தரலிங்கம்; அட்வகேட் ரீ சோமசேகரம்; அட்வகேட் ராஜராஜேஸ்வரன் தங்கராசா ஆகியோரின் உதவியுடனும் புறக்டர் பி உலகநாதனின் அனுசரணையுடனும் ஆஜரானர். விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது.

## நாவலர் நூல்நிலைய திறப்புவிழா இன்று

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர் நாவலர் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள நூல் நிலையத் திறப்புவிழா இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவிருக்கிறது. திரு. ச. அம்பிகைபாகனின் வரவேற்புரையுடன் ஆரம்பமாகும் இவ்விழாவில் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை ஆசியுரை வழங்குவார் நாவலர் சபைத்தலைவர் வீ. சிவசுப்பிரமணியம் 'நாவலர் இலட்சியங்கள்' என்னும் பொருள்பற்றி உரைநிகழ்த்துவார்.

இந்நூல் நிலையத்துக்கு உகந்த புத்தகங்களை உதவுமாறும், நாவலர்நூல் நிலையத்தை நிறுவுவதென்ற நாவலர் சபையின் குறிக்கோளை நிறைவேற்றுவதற்கு தமிழ்மக்களினதும் சிறப்பாக சைவமக்களினதும் உதவி பெரிதும் தேவைப்படுவதாகவும் நாவலர் சபை வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளது.

நாவலர் பெருமானால் இயற்றப்பெற்ற முதற்பதிப்பாக அச்சிடப்பட்ட நூல்கள், நாவலர் பெருமானைப் பற்றி ஏனையோர் எழுதிய நூல்கள், சைவசித்தாந்த நூல்கள், ஆகமங்கள், திருமுறைகள், புராணங்கள், இலக்கிய நூல்கள், இலக்கண நூல்கள் போன்ற தலைப்புக்களைக் கொண்ட நூல்கள் கைவசமிருந்தால் இந்நூல்நிலையத்துக்கு உபகரிக்குமாறு நாவலர்சபை கேட்டுக்கொண்டுள்ளது.

செனட்டில் விடுமுறை மசோதா

## இன்றும் வாக்கெடுப்பு நடைபெறவில்லை

கோட்டை, புதன்

இலங்கையின் புதிய விடுமுறை பற்றிய சட்ட மூலம் இன்று செனட்சபையில் இறுதியாக வாக்கெடுப்புக்கு விடப்படுமென எதிர்பார்த்தபோதிலும் வாக்கெடுப்புக்கு விடப்படவில்லை.

இந்தக் கட்டத்துக்கு திரு. கே. எம். பி. ராஜரத்தின கொண்டுவந்த 6 திருத்தங்கள் குழு நிலையில் ஆராயப்பட்டன இதற்கு முன்பாக இச்சட்ட மூலத்தின் இரண்டாவது வாசிப்புக்குப் பின் விடப்பட்ட வாக்கெடுப்பில் சட்ட மூலத்திற்கு ஆதரவாக 15 வாக்குகளும் எதிராக 3 வாக்குகளும் கிடைத்தன.

திரு. ராஜரத்தினவினால் கொண்டுவரப்பட்ட 2 திருத்தங்களும் குழு நிலையில் ஆராயப்பட்ட பின் நிராகரிக்கப்பட்டன. மற்றும் அவரால் கொண்டுவரப்பட்ட 5 திருத்தங்கள் வாபஸ் பெறப்பட்டன.

பௌத்த பீடாதிபதிகள் விடுமுறை மாற்றத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர் என செனட்டர் செல்லையா குமாரசூரியர் கூறினர்.

இன்று நடைபெற்ற விவாதத்தின் போது புதிதாக நியமிக்கப்பட்ட செனட்டர் பீற்றர் சில்வா தனது கன்

(6-ம் பக்கம் பார்க்க)

ஸ்ரீ கலிங்கன்
நுணுவில்
தினசரி பி.ப. 6 30, 10-00
முக்கமாலா - அஞ்சலிதேவி
நடித்த
நிரபராதி

வெலிங்டன் / வெஸ்லி சினிமா
கனிப்பாய்
பி ப 2-30, 6-30 10-00
ரவிச்சந்திரன் இரு வேடங்களில்
ஜெயலலிதா-நாகேஷ்
நடித்த
பணக்காரப்பிள்ளை

ராணி
(யாழ்ப்பாணம்)
பி.ப. 2 30 இரவு 6-30, 10-00
சுந்தரராஜன் - நாகேஷ்
சௌகார்ஜானகி - லக்ஷ்மி
நடித்த
கஸ்தூரி திலகம்

வின்ஸர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
எம். ஜி, ஆர். வாணிஸ்ரீ-நம்பியார்
அசோகன், ஜோதிலட்சுமி, நாகேஷ், மனோரமா
மற்றும் பலர் நடித்த
தலைவன்

ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
பேபி ராணி
சுந்தரராஜன்—பத்மினி
நடித்த
குழந்தைக்காக

தினசரி பி. ப. 2-00
றீகல் யாழ்ப்பாணம் இரவு 9-45 மட்டும்
கே. ஏ தங்கவேலு, அஞ்சலிதேவி,
டி. ஆர். ராமச்சந்திரன் நடித்த
அடுத்தவீட்டுப் பெண் புதிய கொப்பி

REGAL - Jaffna. NOW SHOWING
Daily at 5-15 & 7-15 p.m. only
Sat, Sunday 10-30 A. M.
Jim Brown - Rock Hudson in
ICE-STATION-ZEBRA (Color Scope)

கடைசி வாரம்
இந்தியாவில் பல நகரங்களிலும், ஈழத்தின் தலைநகர் கொழும்பிலும் 25 வாரங்களுக்கு மேல் காட்சியளித்துப் பெரும் சாதனையை நிலைநாட்டிய வெற்றிச் சித்திரம்.

லிடோ யாழ்நகர்
தினசரி காலை 10-30, பி ப 2-30, மாலை 6-30, இரவு 10-00



சாதனா
சஞ்சே
பால்ராஜ்ஸானி
சப்னம்
நடித்த
ஏக்பூல்
தோமாலி
( ஹிந்தி )
( ஈஸ்ட்மன் கலர் )

வெலிங்டன்
(யாழ் நகர்)
தினசரி மூன்று காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
ராஜன் - சௌகார்ஜானகி
கே. பி. சுந்தராம்பாள்
நடித்த
துணைவன்


## கேள்வி விளம்பரம்

### கிளிநொச்சி பட்டணசபை

கிளிநொச்சி சந்தை மைதானத்தில் மாட்டிறைச்சிக் கடை இல 1 அமைத்து 20-8-71 தொடக்கம் 31-12-71 வரையிலான காலத்திற்குக் குத்தகையாக எடுத்து இறைச்சி விற்பனை செய்வதற்கு அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1971-ம் ஆண்டு ஆவணி மாதம் 18-ம் திகதி முற்பகல் 9-00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்

கேள்விகள் பிணைப்பணம் (திருப்பிக் கொடுபடமாட்டாது) ரூபா. 10/- செலுத்தி 18-8-71 மு. ப. 9-00 மணி வரை இச்சபை அலுவலகத்திலிருந்து கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளலாம்

கேள்வி நிபந்தனைகள் விண்ணப்பம் செய்வதில் பேரிலோ அன்றி நேரிலோ பட்டணசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

ச. சு. முருகேசு
தலைவர்,
பட்டணசபை,
கிளிநொச்சி.

பட்டணசபை அலுவலகம்,
கிளிநொச்சி,
5-8-71. 2957

## விளையாட்டுப் பயிற்சிகள் முடிந்தன

அம்பன், புதன்

கொழும்பிலிருந்து பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிக்கு கடந்த மாதம் வருகை தந்த இலங்கை தேசிய விளையாட்டுப் பயிற்சியாளர்கள் பயிற்சி வகுப்புக்களை முடித்துக்கொண்டு திரும்பியுள்ளனர்.

பயிற்சி வகுப்புகள் ஹாட்லிக் கல்லூரி, மெதடிஸ்த பெண்கள் பாடசாலை, கடற்கரை மைதானம் ஆகிய இடங்களில் நடைபெற்றது. வலைப்பந்தாட்டப் பயிற்சி வகுப்பை திருமதி பியூட்றிஸ் சில்வாவும், மெய்வல்லுனர் பயிற்சி வகுப்பை அன்ரனி அமரசிங்காவும் நீச்சல் பயிற்சியை சிறில் பெரேராவும், உடற்பயிற்சியை காமினி விஜயபாலாவும், கரப்பந்தாட்டப் பயிற்சியை விஜயவீரவும் நடத்தினர். தேசிய விளையாட்டுப் பயிற்சியாளர்கள் புலோலி ஆண்கள் பாடசாலைக்கும், துன்னாலை மின் விளையாட்டுக்கழகத்திற்கும் விஜயம் செய்தனர். இவர்களுக்கு அங்குவரவேற்புபசார விருந்து நடைபெற்றது. இப்பயிற்சி வகுப்புகளில் 600க்கு மேற்பட்ட மாணவர்கள் கலந்துகொண்டனர். பயிற்சி வகுப்புக்களுக்கான ஏற்பாடுகளை வடமராட்சிவடக்கு-கிழக்கு காரியாதிகாரி பிரிவு விளையாட்டுப் போதனாசிரியர் திரு க. கதிர்காமத்தம்பி செய்திருந்தார்.


MANOHARA- Jaffna
Daily
4-45, 7-00 & 9-45 p.m.
Saturday, Sunday 10-30A.M
Marie - France Boyer
in
SIN WITH A STRANGER
(Techni Color)

நாகம்ஸ் சினிமா
சுன்னாகம்
Daily 4-30 p m
Saturday Sunday 10-30
NAKED WORLD

3-வது வாரம்
தினசரி மாலை 6-30, 9-45
ஏ. பி. நாகராஜன்- வரலக்ஷ்மி
நடித்த
ஏழு பிள்ளை
நல்லதங்காள்


## யாழ்ப்பாணம் மாநகர சபை

### ஏல விற்பனை

பின்வருவன ஏலத்தில் விற்கப்படவிருக்கின்றன எல்லாப்பொருட்களும் அந்தந்த இடங்களில் வைத்து விற்கப்படும். கூடிய கேள்விக்காரர் உடனடியாக அத்தொகையை ஏலவிற்பனை உத்தியோகஸ்தரிடம் செலுத்தி குறிப்பிட்ட பொருளை அப்புறப்படுத்தவேண்டும்.

4 தறித்த பனை மரங்கள்- 6-ம் வட்டாரம், ஈச்சமட்டை விளையாட்டு மைதானத்தில் 16-8-71ம் திகதி காலை 10-00 மணிக்கு.

8 தறித்த பனை மரங்கள்- குருநகர் திட்டியில் பி. டபிள்யு. டி. கந்தோருக்குப் பின்புறமாக 16-8-71ம் திகதி 11-00 மணிக்கு.

15 தறித்த பனைமரங்களும் 1 தறித்த தென்னைமரமும்- குருநகர் திட்டி இராசசிங்கம் வீதியில் 16-8-71ம் திகதி 11-30 மணிக்கு.

எடுக்குவியல் ஒன்று- மாநகர சபைக் கொல்களம், வண்ணை வீதி கொட்டடி 17-8-71ம் திகதி 10-00 மணிக்கு.

ஒரு மருதமரமும் நான்கு கொப்புகளும்- மணிக்கூட்டுக்கோபுரத்தின் அண்மையில் பெட்ரோல் விற்பனை நிலையத்திற்கு முன்பாக, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 17-8-71-ம் திகதி 11-00 மணிக்கு.

ஒரு வாகைமரம்- சிறைக் கோவில்ரேட், தின்னவேலி உபதபால் கந்தோருக்கு முன்பாக. 16-8-71-ம் திகதி காலை 10-30 மணிக்கு.

ஏ. ரி. சுந்தரம்,
மாநகர சபை
ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

5-8-71 2955

## சாவகச்சேரி நகரசபை

### கேள்விப் பத்திர விளம்பரம்

29-7-71-ந் திகதி பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தின்படி 10-8-71-ந்திகதி நண்பகல் 12-00 மணிவரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளுவதற்குப் பதிலாக 16-8-71-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். முன் விளம்பரத்தில் சொல்லப்பட்ட வேலைகளுக்கான கேள்விப் பத்திரங்கள் இவ்வலுவலகத்தில் 15-8-71-ந் திகதி நண்பகல் 12-00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

இதைப்பற்றிய விதிகளும் இன்னும் விபரங்களும் அறியவேண்டின் சபை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் அறிந்துகொள்ளலாம்.

சு. கனகரத்தினம்
தலைவர்
நகர சபை,
சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
5-8-71. 2958

## புலமைப் பரிசில் பெற்றார்

உரும்பராய், புதன்

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி க. பொ. த. ப. வகுப்பு உயர்தர மாணவனான செல்வன் வை. சிவாஜி இந்திய அரசினால் வழங்கப்பட்ட பொதுநலவாய புலமைப் பரிசிலைப் பெற்றுப் புள்ளிவிபரக் கணித வியற் கல்வி கற்பதற்குக் கல்கத்தா பல்கலைக் கழகத்துக்குச் சென்றுள்ளார்.

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள், ஓட்டுவேலைகள், பல்லுச்சக்கரம் வெட்டுதல் (Gearwheel cutting) பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3409

### கல்வி

மெக்கானிக் பயிற்சி

போதனை செய்முறை எமது 12வது பருவ முழுநேர மோட்டார், டிராக்டர் டீசல், டிப்புளோமோ பயிற்சி வகுப்புகள் 6-9-71ல் ஆரம்பமாக இருக்கின்றன. விபரத்துடன் கூடிய விண்ணப்பப்படிவங்களுக்கு அதிபர், ஸ்ரீராஜ் ஓட்டோமோபைல் என்ஜினியரிங் நிறுவனம், மொம்சாக மாளிகை, 11/A & 11/B ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 3457

வகுப்புகள்

இலவச இரவு வகுப்பு வசதியற்ற மாணவ மாணவிகளுக்கு சனி, ஞாயிறு தினங்களில் நடாத்தப்படும். கிராமசேவையாளரின் உறுதிப்பத்திரத்துடன் விண்ணப்பிக்கவும். யாழ்.இளைஞர் கழகம் நம்.1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 3461

### தேவை

மனேச்சர்:

யாழ்ப்பாண நகரிலுள்ள பெட்ரோல் செட்டுக்கு மனேச்சர் தேவை. வயது 25—40, பிணைப்பணம் ரூபா 2000/- அனுபவமுள்ளவர்கள் நற்சாட்சிப்பத்திரங்களுடன் 19 8-71க்கு முன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 3460 C/o ஈழநாடு. யாழ்ப்பாணம். 3460

அனுபவம் உள்ள லேத் இயக்குனர் (Lathe Operater) தேவை. நேரில் வரவும்; சேவி கிளாஸ் வேக்ஸ், கோப்பாய். 3459

வெல்டர்:

மின்சார ஒக்ஸி வெல்டிங்கிலும், பொது இரும்புவேலைகளிலும் குறைந்தது ஐந்து வருட அனுபவமுள்ள வெல்டர், சான்றிதழ்களுடன் விண்ணப்பிக்க. விளம்பர இல. 3464 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம். 3464

கடைச்சல் இயந்திரத்தில் (Lathe Operator) வேலை செய்ய அனுபவமுள்ளவர்கள் நற்சாட்சிப்பத்திரங்களுடன் நேரில் விண்ணப்பிக்கவும். வெள்ளியம்பதி. அளவெட்டி. 3463

### விற்பனைக்கு

ராதா பரிமள
ஆமணக்கெண்ணெய்

கூந்தலை நீளமாகவும் அடர்த்தியாகவும் வளரச்செய்யும் கண்களுக்குப் பிரகாசத்தையும் மூளைக்குக் குளிர்ச்சியையும் கொடுக்கும். என். சுப்பிரமணியம் கொம்பனி 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160 செட்டியார் தெரு, கொழும்பு. 3410

## இருதலை ஆட்டுக்குட்டி

யாழ்ப்பாணம், புதன்

சுழிபுரம் கிழக்கைச் சேர்ந்த திரு க நாகலிங்கம் என்பவருடைய வீட்டில் ஆடு ஒன்று இரு தலைகள் கொண்ட குட்டி ஒன்றை ஈன்றுள்ளது. இதற்கு 4 கால்களும் இரு தலைகளும் உள்ளன. இந்தக் குட்டி இன்றும் உயிருடன் இருக்கிறதாம்.

# செனட்டர் கென்னடியின் பாக். விஜயத்துக்குத் தடை!

## முஜிபுர் விசாரணை பற்றி உலகெங்கும் கவலை

புதுடில்லி, ஆகஸ்ட் 11

**அமெரிக்க செனட்டர் எட்வர்ட் கென்னடி பாகிஸ்தானுக்கு விஜயஞ் செய்யவிருந்ததை யாஹ்யாகான் அரசாங்கம் ரத்துச்செய்து விட்டது.**

**கிழக்குப் பாகிஸ்தானுக்கும் மேற்குப் பாகிஸ்தானுக்குமான தமது சுற்றுப் பயணத்தைச் செனட்டர் கென்னடி நாளைய தினம் ஆரம்பிக்கவிருந்தார்;**

**ஷேக் முஜிபுர் ரஹ்மானை இரகசிய நீதிமன்றம் விசாரணைசெய்யவிருப்பதற்கு உலகம் முழுவதும் கண்டனம் கிளம்பியிருக்கிறது.**

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோசப் கென்னடியின் தம்பியும், அமெரிக்க செனட்சபையின் உறுப்பினருமான செனட்டர் எட்வர்ட் கென்னடி இப்பொழுது இந்தியாவில் இருக்கின்றார்.

அமெரிக்க செனட்சபையின் அகதிகள் சம்பந்தமான துணைக் கமிட்டியின் தலைவராகச் செனட்டர் கென்னடி இருந்துவருகிறார்.

இந்தியாவின் கல்கத்தாவிலும் இதர பகுதிகளிலும் உள்ள கிழக்குப் பாகிஸ்தான் அகதிகள் முகாம்களைச் செனட்டர் கென்னடி பார்வையிட்டார். படகுகளில் அகதிகள் கிழக்குப் பாகிஸ்தானிலிருந்து இந்தியாவுக்கு வந்துகொண்டிருப்பதையும் அவர் பார்த்தார்.

நாளைய தினம் அவர் பாகிஸ்தானுக்குச் செல்லவிருந்தார். மேற்குப் பாகிஸ்தானில் ஜெனரல் யாஹ்யாகானையும் அவர் சந்தித்துப் பேசத் திட்டமிட்டிருந்தார்

இந்தியாவுக்கு வந்தபின் பாகிஸ்தானுக்கு மகிழ்ச்சி அளிக்காத சில கருத்துக்களையும் அவர் இங்கு வெளியிட்டதாகக் கருதப்படுகிறது.

செனட்டர் கென்னடியின் விஜயத்தைப் பாகிஸ்தான் ரத்துச் செய்ததற்கு அங்குள்ள அமெரிக்கத் தூதரகத்துக்குச் சம்பந்தமில்லை என்று அத்தூதரகம் அறிவித்திருக்கின்றது.

### கென்னடி வருத்தம்

தமது வருகையைப் பாகிஸ்தான் அரசு ரத்துச் செய்திருப்பது குறித்துச் செனட்டர் கென்னடி வருத்தம் தெரிவித்தார். பாகிஸ்தான் அதிகாரிகளின் இந்த நடவடிக்கையால் தமது பயணம் வெகுவாகக் குறைந்துவிட்டது என்றார் அவர்.

### ஷேக் முஜிபுர் விசாரணை

ஷேக் முஜிபுர் ரஹ்மானை இரகசியமாக இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்க யாஹ்யாகான் அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைக்கு பல நாடுகளில் எதிர்ப்புக்கள் கிளம்பியிருக்கின்றன.

சர்வதேச ஜூரிகள் சங்கம் தெரிவித்துள்ள கண்டனத்தில் இந்த விசாரணை பற்றி மறுபடியும் ஆலோசிக்கும்படி யாஹ்யாகான் அரசாங்கத்தைக் கேட்டிருக்கின்றது. நீதிக்கு ஒளிவுமறைவு தேவையில்லை. எனவே இரகசிய விசாரணையைக் கைவிடுக என்று அந்த ஸ்தாபனம் கோரியிருக்கிறது.

ஷேக் முஜிபுர் ரஹ்மானுக்கு கருணை காட்டும்படி பாகிஸ்தான் அரசை வற்புறுத்தவேண்டுமென அமெரிக்கச் செனட்சபையின் 11 செனட்டர்கள் அமெரிக்க அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார்கள்.

ஷேக் முஜிபுர் ரஹ்மான் இரகசியமாக விசாரிக்கப் படவிருப்பது பற்றி ஐ. நா. பொதுச் செயலாளர் யு தாண்ட் விடுத்துள்ள அறிக்கையொன்றில் இந்த விசாரணை பாகிஸ்தானுக்கு உள்ளேயும் வெளியேயும் எதிர் விளைவுகளை ஏற்படுத்துமென்று தெரிவித்துள்ளார்.

எகிப்தில் வெளியிடப்படும் ஓரளவு அரசாங்கச் சார்புப் பத்திரிகையான அல் அஹ்ரம் வெளியிட்டுள்ள தலையங்கம் ஒன்றில் ஷேக் முஜிபுர் ரஹ்மான் இரகசியமாக விசாரிக்கப்படுவது கண்டிக்கப்பட்டுள்ளது.

பிரிட்டிஷ் வழக்கறிஞர்கள் நிறுவனம் ஒன்று ஷேக் முஜிபுர் ரஹ்மான் சார்பில் சட்டநிபுணர்களை ஆஜர் செய்வதற்கு முயற்சி எடுத்ததாகவும் ஆனால் அம்முயற்சிகள் பலனளிக்கவில்லையென்றும் அறிவித்துள்ளது. ஷேக்குடன் தொடர்புகொள்ள எடுக்கப்பட்ட முயற்சிகள்யாவும் வியர்த்தமாகியதாக அந்த ஸ்தாபனம் அறிவித்துள்ளது?

ஷேக்கை இரகசியமாக ராணுவ கோர்ட் விசாரிப்பதை சிக்கிம் ஆட்சிமன்றம் கண்டித்திருக்கின்றது.

இந்த விசாரணைபற்றி மறு ஆலோசனை செய்யும்படி பாகிஸ்தான் அரசை மேற்கு ஜெர்மன் தேசியசட்டசபை துணைசபாநாயகர் வற்புறுத்தியுள்ளார்"

## சோவியத்மந்திரிசபை அங்கீகாரம்

இந்தியாவுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை சோவியத் மந்திரிசபை அங்கீகரித்துள்ளது. இனி அது சோவியத் ஆட்சிமன்றத்தின் உயர் அதிகார சபையின் அங்கீகாரத்துக்கு அனுப்பப்படும்.

இந்த ஒப்பந்தத்தை ஏற்கனவே இந்திய லோகசபை ஏற்றுக்கொண்டுள்ளது. லோகசபையில் இந்த ஒப்பந்தம் மீதான விவாதம் நடைபெற்றபோது மூன்று அங்கத்தவர்கள் மாத்திரமே எதிர்த்தார்கள்.

### கருணாநிதி வரவேற்பு

சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவுக்கும் இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுவர்ண்சிங்கிற்குமிடையில் ஏற்பட்டுள்ள ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு. கருணாநிதி வரவேற்றிருக்கிறார்.

முன்னாள் மேற்கு வங்காள முதல்வர் திரு. அஜாய் முகர்ஜியும் இந்த ஒப்பந்தத்தை வரவேற்றுள்ளார்.

தற்போது இந்தியாவிலுள்ள சோவியத் வெளிநாட்டமைச்சர் திரு. குரோமிக்கோவ் நேற்று பாரதப் பிரதமர் இந்திரா காந்தியைச் சந்தித்துப்பேசினார். இரு நாடுகளுக்குமிடையிலான பொதுவிஷயங்களை பற்றியும் ஷேக்முஜிபுர் ரஹ்மான் விசாரணைபற்றியும் அவர்கள் ஆலோசித்ததாகத் தெரிகின்றது.

பாகிஸ்தானுக்குள் ஊடுருவல் செய்த 70 இந்தியர்கள் கொல்லப்பட்டதாக பாகிஸ்தான் ராணுவத்தினர் அறிவித்துள்ளனர். ஆனால் இந்தியா இதனை மறுத்துள்ளது.

## மேலைநாடுகளில் தொழிற்கல்வி: பாடசாலை அட்டவணையில் முதலிடம்

லண்டன், ஆகஸ்ட் 11

பாடசாலைகளில் தொழில் பயிற்சிக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண்டும் என்று இன்றைய பிரிட்டிஷ் கல்வி அமைச்சு வலியுறுத்தி வருகிறது. அத்துடன் மாணவர்கள் நாட்டுக்கும் தமது பிற்கால வாழ்க்கைக்கும் உபயோகமாக இருக்கக்கூடிய ஒரு தொழிலை முழுமையாகப் படித்து அதில் நன்கு தேர்ச்சி பெற்றிருக்க வேண்டுமென்றும் கல்வி அமைச்சு எடுத்துக்கூறி வருகிறது.

மேலைநாடுகளில் எப்பொழுதுமே தொழிற்கல்விக்குப் பாடசாலை அட்டவணையில் முதலிடம் கொடுக்கப்படுகிறது. உதாரணமாக, பிரிட்டனில் உள்ள ஆரம்ப மத்திய பாடசாலைகளின் கல்வி அட்டவணையில் தொழிற் கல்வியானது ஒவ்வொரு மாணவனின் திறமைக்கேற்பப் பகுக்கப்பட்டிருக்கிறது. பாடசாலை இருக்கும் நகரத்தின் அல்லது கிராமத்தின் தேவைகளையும் மனதிற்கொண்டே இப்பாடசாலை அட்டவணைகள் தயாரிக்கப்படுகின்றன.

அங்கு மாணவர்கள், வர்த்தகப் பயிற்சியைப் பெறுவதற்கு சிறு கம்பனிகளை உருவாக்கி நடத்துகிறார்கள். படகுகள் அமைத்து விற்பனை செய்கிறார்கள் உயர்ரக தேனீ இனத்தை உருவாக்கக்கூடிய பலனைப் பெறுகிறார்கள். பாடசாலையையும் அதன் சுற்றுப்புறங்களையும் மிகவும் துப்புரவாக்கி வைத்திருக்கச் சிறு சாதனங்களையும், இயந்திரங்களையும் தாமே அமைக்கிறார்கள். இப்படி மாணவர்கள் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் உபயோகமான தொழில் கல்வியைப் பெறுவதில் கல்வி இலாகா மட்டுமல்லாது, அங்குள்ள ஆசிரியர்கள் யாவரும் ஊக்கமுடன் இணைந்து உதவுகிறார்கள்.

லண்டனுக்கருகில், கிரேவலி பாடசாலை என்று ஒன்றிருக்கிறது. இப்பாடசாலையின் பதினேழு வயதுடைய மாணவர்கள் ஒன்றிணைந்து தாமும் உபயோகமான தொழில் ஒன்றைப் பழகிக்கொள்ள விரும்பினர். அப்பகுதியில் இருந்த வைத்தியசாலையில் நோயாளிகளுக்கு அவசியமான வைத்திய சாதனங்களுக்குத் தட்டுப்பாடு இருந்தது. வாதநோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகள் நடக்கவும், தமது வேலைகளைத் தாமே செய்து பழகவும் பல்வித உதவிச் சாதனங்கள் தேவைப்பட்டன. இவற்றை உருவாக்குவதென மாணவர்கள் தீர்மானித்தனர்.

தமது ஆசிரியரின் உதவியுடன் வாதநோயாளர் இருபக்கமும் ஊன்றி நடக்கக்கூடிய, நீண்ட பாரமற்ற உலோக ஊன்றுகோல்களை இம் மாணவர்கள் முதலில் அமைத்தனர். பல நோயாளிகளைப் பரிசோதித்து, அவர்களுடைய பிரச்னைகளையும் தேவைகளையும் கேட்டறிந்து அதன் பயனாக அமைக்கப்பட்ட இந்த ஊன்றுகோல்கள், லண்டனிலுள்ள குவீன் மேரி வைத்தியசாலையில் பாவிக்கப்பட்டுவருகின்றன.

'மாணவர்கள் தொழிற்கல்வியைப் பயில்கிறோம் என்று சொல்லிக்கொண்டு, கற்பனையில் எழுந்த பிரச்னைகளுக்குத் தீர்வுகாண முற்படுவதில் பயனில்லை. நாளாந்த வாழ்க்கையில், சமூகத்தில் ஏற்படும் உண்மையான பிரச்னைகளைத் தீர்ப்பதை மூலமாகக் கொண்டதாக தொழிற்கல்வி புகட்டப்படவேண்டும். கிரேவலி மாணவர்களின் சாதனை இதற்கொரு சிறந்த எடுத்துக்காட்டு என்று மிகவும் பெருமிதத்துடன் கூறுகிறார் திரு. ஹோக்கின்ஸ். கிரேவலி மாணவர்களின் தொழிற்கல்வி ஆசிரியர் இவர்தான்.

## சோவியத் யூனியனில் கண்ட உண்மை

# "மனிதனை வாழ்விக்காவிடில் மதம் மறக்கப்பட்டுவிடும்"

### குன்றக்குடி அடிகளார் பேட்டி

(ஒருவிசேஷ நிருபர்)

சென்னை, ஆகஸ்ட் 11

**மனிதனை வாழ்விக்க சமயம் தவறுமானால் அது மனிதனால் மறக்கப்பட்டுவிடும் என்பதை தமது சோவியத் விஜயத்தின்மூலம் விளங்கிக்கொண்டதாக தவத்திரு குன்றக்குடி அடிகளார் இன்று இங்கு கூறினார்.**

சோவியத் யூனியனுக்கு சென்று திரும்பியுள்ள குன்றக்குடி அடிகளிடம் அங்கு செல்வதற்கு ஏன் விரும்பினீர்கள் என்று கேட்டபோது அவர் கூறியதாவது!

தமிழ் நாட்டில் [illegible] சமய எதிர்ப்புக்கள் வலுத்துவருவதற்கான காரணங்களை அறியவிரும்பினேன். பொதுவாக மார்க்ஸீய தத்துவங்கள் சமயஎதிர்ப்புடையவை என்று கூறப்படுவதுண்டு மார்க்ஸீய சித்தாந்தங்களை நான் நன்கு பயின்றிருப்பதால் அது எங்ஙனம் மனிதனை மாற்றிவிடுகின்றது என்பதை சோவியத் நாட்டில் அறியவிரும்பினேன். மனிதனை மதம் வாழ்விக்கத் தவறுமானால் அது மனிதனால் மறக்கப்பட்டுவிடும் என்பதைப் புரிந்துகொண்டேன்; எனவே சமயம் மக்களால் மறக்கப்படாமலிருக்க மனித வளர்ச்சிக்கான முயற்சிகளை சமய அடிப்படையிலேயே செய்ய வேண்டும்'' என்று அவர் கூறினார்.

### சோவியத் ஒருமைப்பாடு

சோவியத்நாட்டில் எவரும் தம்மை ரஷ்யர் என்று கூறிக்கொள்ள விரும்புவதில்லை. எந்த ஒரு ராஜ்யத்தின் பேரிலும் தங்களை அறிமுகப்படுத்திக்கொள்ள அவர்கள் விரும்புவதில்லை சோவியத்நாடு என்று கூறுவதி

4-ம் பக்கம் பார்க்க

## யானைகள் படையெடுப்பு 20 குடிசைகள் நாசம்

கோட்டை, புதன்

வரட்சிகாரணமாகத் தண்ணீர் தேடி மக்கள் குடியிருப்புப் பகுதிக்குப் படையெடுத்த யானைகளின் அட்டகாசத்தினால் விந்தனே கிவசாயிகளின் 20 குடிசைகள் தரைமட்டமாகின. அவற்றிலிருந்த சிறுதானியவகைகளும் நாசமாயின

தலைவெல என்ற பகுதியில் 13 குடிசைகளும் ஹேலவுல தேக்கவாடிய என்ற பகுதியில் 5 வீடுகளும் இன்னொரு இடத்தில் 2 வீடுகளும் யானைகளால் சேதப்படுத்தப்பட்டுள்ளன

ஹசலக்க என்ற குடியேற்றப்பகுதியிலும் பெருவாரியான யானைகள் படையெடுத்துள்ளதாகவும் இதனால் மக்கள் பீதியடைந்திருப்பதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது

......

## மனிதனே...

8-ம்பக்கத் தொடர்ச்சி

லேயே அவர்கள் பெருமைப்படுகிறார்கள். பல்வேறு தேசிய இனங்கள் வாழும் ஒரு நாட்டில் இப்படியான ஒற்றுமைப்பாடு நிலவுவது என்னை மிகவும் கவர்ந்தது என்றார் குன்றக்குடி அடிகளார்.

மருத்துவர்கள் குழுவொன்றுடன் பேசிக்கொண்டிருந்தபோது அவர்களை ரஷ்ய டாக்டர்கள் என்று தாம் விளிக்க நேர்ந்ததாகவும், அவர்கள் உடனே தங்களை ரஷ்ய டாக்டர்கள் என்று சொல்லவேண்டாமென்று வினயமாகக்கேட்டுக்கொண்டதாகவும் சோவியத் டாக்டர்கள் என்றே சொல்லும்படியாகவும் கேட்டுக்கொண்டார்கள் என்றும் இது தம்மைப் பெரிதும் கவர்ந்ததாகவும் அடிகள் சொன்னார்.

### தமிழ் இலக்கிய ஆராய்ச்சி

மாஸ்கோவில் மொழி அறிஞர்கள் பல்வேறு மொழிகள் பற்றியும் ஆராய்கிறார்கள். மனிதனின் மன வளர்ச்சி பற்றியே அவர்கள் பெரிதும் அறிய முற்படுகிறார்கள். தமிழ் இலக்கியங்களைப் பயில்கிறார். தேசிய இலக்கியங்களான பாரதம் ராமாயணம் பற்றி ஆராய்கிறார்கள், கலை நிகழ்ச்சிகளை நடத்துகிறார்கள்.

மதம்பற்றி தெளிவான கருத்து ஏற்பட அங்கு வாய்ப்பில்லை என்றாலும் எமது தமிழ் இலக்கியங்களில் உள்ள மனிதனை அவர்கள் புரிந்துகொள்ள விரும்புகிறார்கள். இதுவும் என்னைக் கவர்ந்தது என்றார் அடிகளார்.

### மதமும் அபினும்

மாஸ்கோவிலுள்ள தமிழ் அறிஞர்கள் நிறுவனத்தில் நான் இங்கிருந்து கொண்டு சென்ற அப்பர்சுவாமிகளின் திருவுருவத்தை வைத்துவிட்டு வந்தேன் அப்பர் சுவாமிகளின் சமயக்கருத்துக்களை அவர்களுக்கு விளக்கினேன். தமிழ் நாட்டு சமயம் அபின்போன்றது அல்லவென்று நான்கூறினேன். எமது சமயவாதிகள் அரசியலில் ஆதிக்கம்செலுத்தல் துணிந்ததில்லையென்று விளக்கினேன் என்றார் அடிகள்.

### பாரதியிடம் ஈடுபாடு

தமிழ் இலக்கியவாதிகளில் பாரதியிடமும் வள்ளுவரிடமும் அங்கு அதிக ஈடுபாடு காணப்படுகின்றது ரஷ்யப் புரட்சி பற்றி பாடிய பாரதியையே அவர்கள் பெரிதும் விரும்பிப் படிக்கிறார்கள். அவருக்கு சோவியத் நாட்டில் அதிக மதிப்புண்டு என்று அவர் மேலும் கூறினார்.

கா. ப. சபை

## மின்கடன் நிலுவையை செலுத்தியது

மாவிட்டபுரம், புதன்

உள்ளூராட்சி மன்றங்களுக்கு அமைச்சர் விடுத்த வேண்டுகோளையடுத்து மின்கடனுக்கான நிலுவைப் பணம் 15 ஆயிரம் ரூபாவை காங்கேசன்துறை பட்டின சபை உடன் கட்டிமுடித்தது.

உள்ளூராட்சி அமைச்சர் நாட்டின் அபிவிருத்தியை முன்வைத்து அரசுக்கு செலுத்தப்படாமல் இருக்கும் மின்கடன் பணத்தை கட்டவேண்டும். இல்லாவிட்டால் மின்இணைப்பு நிறுத்தப்படும் என்று உள்ளூராட்சி மன்றங்களுக்கு அறிவித்திருக்கிறார்கள்.

இப்பட்டினசபை பணத்தை ஒழுங்காக நேர்மையானமுறையில் செலுத்தியதையடுத்து பட்டின சபைக்கு 1 லட்சத்து 57 ஆயிரம் ரூபா உதவி வழங்கப்படவிருக்கிறது.

......

## "சைவத்துக்கு நஷ்டம்"

சித்தாந்த வித்தகர் கப்பாக்கம் சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் சென்னையிலிருந்து சைவத்துக்குஒருநஷ்டம் என்றதலைப்புடன் எழுதுவதாவது:-

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் பிரக்டர் தொழில் நடத்தி வந்தவரும் சைவபரிபாலன சபையின் தலைவரும் தன்னடக்க முள்ளவரும், நல்ல பண்பாடு உடையவரும் பழகுவதற்கு இனிமையானவரும் பரோபகார சிந்தையுடையவருமான திரு. ஆ. தனபாலசிங்கம் அவர்கள் சிவனடி சேர்ந்த செய்தியறிந்து வருந்தினேன். இந்த நஷ்டத்திற்கு ஒருவராலும் ஈடுசெய்ய இயலாது. இவரது ஆன்மா இறைவனடியில் சாந்தியாக இருப்பதாக அன்னார் குடும்பத்துக்கு என் அனுதாபங்கள் உரித்தாகுக. வாழ்க தனபாலசிங்கத்தின் புகழ்!

## அச்சுவேலியில் பால் சங்கம்

யாழ்ப்பாணம், விசா.

அச்சுவேலி 'இளங்கதிர்' சனசமூக நிலையத்தினரால் சிறுவர்கள் நலனுக்காக அமைக்கப்பட்ட பால்சங்கம் கோப்பாய்த் தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எஸ். கதிரவேலுப் பிள்ளையால் திறந்து வைக்கப்பட்டது.

கிராம முன்னேற்றச் சங்கம் ஒன்று அமைத்துத்தரும்படியும், பத்த மேனிப் பகுதியிலுள்ள முடிக்குரிய நிலத்தை நிலமற்ற ஏழை விவசாயிகளுக்குப் பெற்றுத்தர வேண்டுமென்றும் இவ்வைபவத்தில் பேசிய திரு. எம். பொன்னுத்துரை எம். பி. யைக் கேட்டுக் கொண்டார்.

விரைவில் இதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக எம். பி. உறுதியளித்தார்.

## முறையீடு

குருநகர், புதன்

யாழ்ப்பாணம், பெரிய கடைப் பகுதியில் சில கடைகளில் சாப்புச்சட்டம் ஒழுங்காக நடத்தப்படாது மீறப்படுவதாகவும் கடைகளில் வேலை செய்யும் ஊழியர்களுக்கு அதிகநேரவேலைகள் கொடுக்கப்பட்டுவருவதாகவும் ஊழியர்களுக்குப் பதிவேடுகள் வைக்கும் முறைகளும், லீவுகள் கொடுக்கும் முறைகளும் சரியாக இருப்பதில்லையெனவும் இப்பகுதியில் உள்ள தொழிற்சங்கவாதிகள் சிலரால் தொழிற்பகுதிப் பரிசோதகர்களுக்கு முறையீடுசெய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

## கொழும்பில் பாரதி விழா

குருநகர், புதன்

புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் சார்பில்இவ்வருடம் நடைபெறும் பாரதி விழாவை இம்மாதம் கொழும்பில் நடத்துவதென்று புங்குடுதீவு இளைஞர் கழகத்தின் கொழும்புக் கிளைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்விழா இம்மாதம் பம்பலப்பிட்டியில் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாக விழா அமைப்பாளர்களில் ஒருவரான வி. வே. சோமசுந்தரம் தெரிவித்தார் ......

## தீர்மானம்

குருநகர், புதன்

புங்குடுதீவு தெங்குந்திடல் விநாயகர் ஆலய வருடாந்த உற்சவத்தின் போது சாதி பேதமற்ற முறையில் ஆலய வழிபாடு செய்வதற்கு சகல மக்களுக்கும் உரிமைவழங்க வேண்டுமென கடந்த 6ம் திகதி மேற்படி ஆலயத்தில் கூடிய கூட்டமொன்றில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொதுக்கிணறுகளில் சாதி வேறுபாடற்ற முறையில் சகலரும் தண்ணீர் அள்ள வேண்டுமென உரிமைகோரி உண்ணாவிரதமிருந்த சர்வோதய இயக்கத்தினரான திரு சு. வில்வரத்தினம், திரு மு. தளையசிங்கம் ஆகியோருக்கு ஏற்பட்ட சம்பவங்களுக்காக இக் கூட்டத்தில் ஆழ்ந்த வருத்தம் தெரிவிக்கப்பட்டதுடன் மாவிட்டபுரம் ஆலயத்தில் சைவமக்களுக்கெதிராக திரு வி. சுந்தரலிங்கமும் பிரமஸ்ரீ துரைச்சாமி குருக்களும் எடுத்துவரும் நடவடிக்கைகள் சைவசமயம் போதிக்கும் அன்புக்கும், கருணைக்கும் முரணானவை என்றும் மனிதாபிமானத்திற்கு எதிரானவை என்றும் வருத்தம் தெரிவிக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

......

## பாலம் அமைத்துத் தருக'

ஒட்டுசுட்டான், புதன்

ஒட்டுசுட்டான் பகுதியிலுள்ள பேர் ஆற்றுக்கு மேலாகப் பாலம் அமைத்துத் தருமாறு வவனியா ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. எக்ஸ். எம். செல்லத்தம்பு நீர்பாசன அமைச்சரை கேட்டுள்ளார். இப்பாலம் அமைக்கப்பெறின் முத்துஐயன்கட்டுத் திட்டப் மேலும்மேலும் அபிவிருத்தியடைய வாய்ப்பு உண்டாகும் என எம். பி. அமைச்சருக்குத் தெரிவித்துள்ளார்.

......

## பரீட்சையை ஒழிக்கத் தீர்மானம்

எழுதுமட்டுவாள், புதன்

தொழிலின்மைக் கணிப்பு வேலைத் திட்டத்தின் கீழ் அரசாங்கசேவைக்குச்சேர்த்துக்கொண்ட ஊழியர்களின் சிங்கள தேர்ச்சிப் பரீட்சை முறையை ஒழிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரியவருகிறது

அரசாங்கசேவை தொழிற்சங்க சம்மேளனம் பொது சேவை கமிஷன் சபைக்கு விடுத்துள்ள அறிக்கையில் மேற்படி தீர்மானத்தை அறிவித்துள்ளது.

தொழிலின்மைக் கணிப்பு வேலைத் திட்டத்திலிருந்து அரசாங்க சேவைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களில் பெரும்பாலானோர் வயதுபோனவர்களாதலால் இவர்களுக்கான பரீட்சை வைப்பது சாதாரண செயலாகும் என மேற்படி சம்மேளனம் சுட்டிக் காட்டியதைத் தொடர்ந்தே அரசாங்கம் மேற்படி நடவடிக்கையை எடுத்துள்ளதாகத் தெரிகிறது.

## 'வாழ்க்கைக்கு தக்க தொழிலில் ஈடுபடுங்கள்'

மாவிட்டபுரம், புதன்

'இளைஞர்கள் பெரிய அரசாங்க உத்தியோகங்களை எதிர்பார்க்காது வாழ்க்கைக்குத் தக்க தொழில்களில் ஈடுபடவேண்டும்".

இவ்வாறு ஏழாலை வடக்கு சுவாநிதி சனசமூக இளைஞர்களால் சிரமதான மூலம் செப்பனிடப்பட்ட பிள்ளையார் வீதியைத் திறந்து வைத்துப்பேசுகையில் வலி-வடக்கு காரியாதிகாரி திரு பி.எல். பற்றிக் கூறினார்.

திரு. தவப்பிரகாசம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:-

இன்று எம் நாட்டில் முக்கிய பிரச்னையாக விளங்குவது இளைஞரின் வேலையில்லாமையேயாகும். இப் பிரச்னை இலங்கையில் மட்டுமல்ல உலகிலுள்ள பலநாடுகளிலும் உளது. கல்வித் திட்டம் சரியான முறையில் அமையாததால் இப்பிரச்னை தலையெடுத்தது. ஆதலால் கல்வித்திட்டம் மாற்றியமைக்கப்படவேண்டும்.

இலங்கையில் சகல பகுதிகளிலும் காரியாதிகாரிபிரிவுகள் தோறும் அபிவிருத்தியை முன்வைத்து அபிவிருத்தி சபைகள் அமைக்கப்படுகின்றன. இச்சபைகள் மூலம் சகல பகுதிகளிலும் உள்ள கிராமங்களை அபிவிருத்தி செய்ய வசதி ஏற்படும்.

......

## விலங்குகளால் பயிர் அழிவு

பளைகிராமம், புதன்

பளைகிராம விவசாயிகளின் சிறுபோகச் செய்கையை யானைகளும் பன்றிகளும் சமீபத்திலுள்ள காட்டிலிருந்து வந்து அழிக்கின்றனவாம். இதனால் இப்பகுதி மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இவ் விலங்குகளிடமிருந்து தங்கள் பயிரைப் பாதுகாக்க சம்பந்தப்பட்ட மேல் அதிகாரிகள் சமீபத்தில் அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட துவக்குகளைத் திருப்பிக் கொடுப்பதற்கு ஆவன செய்யவேண்டும் என அவர்களைக் கோரியுள்ளனர்.

## 4 பேர் கைது

கோட்டை, புதன்

தடை விதிக்கப்பட்டுள்ள ஜனதா விமுக்தி பெரமுனவுடன் தொடர்புடையவர்கள் என்று கூறப்படும் நான்கு உள்ளூராட்சி ஊழியர்களைப் பொலிசார் கைது செய்துள்ளனர்.

நடைமுறைக்கு ஒவ்வாத வார்த்தைகள் கொண்ட பல கடிதங்களை அமைச்சர்களுக்கும், பல எம். பிக்களுக்கும் இவர்கள் எழுதினார்களாம். கடிதங்களை டைப் அடித்த தட்டச்சு யந்திரங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன,

—

நீர்வேலி

## 'பரலோகமாதா' நவநாள்

யாழ்ப்பாணம், வியா.

நீர்வேலி வடக்கு 'பரலோகமாதா' தேவாலயத்தின் வருடாந்த நவநாள் உற்சவம் நாளை ஆரம்பமாகின்றது.

மேற்படி ஆலயத்தின் கட்டளைக் குரவர் வண. பிதா ஜோசப் தலைமையில் இவ்வுற்சவம் நடைபெறும். இம்மாதம் 21-ம் திகதி இரவு வேஸ்பரும், 22-ம் திகதி காலை பாடற்பூசையும், சுற்றுப்பிரகாரமும் நடைபெறும். கோவில் ஆராதனைகளின் பின், ஆலய முன்றலில் அன்னதானமும் வழங்கப்படும். (தே நி)

## "பணிகளுள் சிறந்தது ஆலயப்பணி"

உரும்பராய், புதன்

"நமக்கு நல்ல பிறவியாகிய மனிதப்பிறவி கிடைத்திருக்கின்றது. இந்த நல்ல பிறவி கிடைத்த போது நல்ல பணிகளைச் செய்யவேண்டும். நற்பணிகளுக்குள்ளே சிறந்த பணி ஆலயப்பணி. ஆலயப் பணியே ஆன்மாஈடேற்றத்துக்கு வழியாம். கற்பகப் பிள்ளையார் கோயிற்பணியே தங்கள் பணியென்று வாழ்ந்தவர்கள் திரு க. செல்லையாபிள்ளையும் அவரது பாரியார் திருமதி மீனாட்சிப்பிள்ளை செல்லையாவுமாவர். இப்பணி செய்து சிவகதி சேர்ந்துள்ளனர். திருமதி மீனாட்சிப்பிள்ளை செல்லையாவினால் உபகரிக்கப்பட்ட சித்திரமஞ்சம் வெள்ளோட்டவிழா நடைபெறும் இந்த நல்ல தினத்தில் அவரது நிழற்படத்தைத் திறந்துவைத்திருப்பது மிகவும் பொருத்தமாகும்" என்று உரும்பராய் கற்பகப்பிள்ளையார் கோயில் சித்திரமஞ்ச வெள்ளோட்ட விழாவில் ஆலய மண்டபத்தில் திருமதி மீனாட்சிப்பிள்ளை செல்லையாவின் நிழற்படத்தைத் திறந்துவைத்துப்பேசிய ஆலயப் பிரதம குருக்கள் சிவஸ்ரீ ச. முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

சித்திரமஞ்சத்தை செய்த பிரதமசிற்பி கலாகேசரி ஏஸ். செல்லையாபிள்ளை திரு. சி. செல்லப்பாவினால் பட்டாடைபோர்த்தி வரவேற்கப்பட்டார்.

தர்மபரிபாலன சபையின் முன்னாள் தலைவர் திரு. வே. நல்லையா தற்போதைய தலைவர் திரு சி. செல்லப்பா, ஆசிரியர் திரு. ஆ. பஞ்சாட்சரம் ஆகியோர்களும் பேசினார்கள்

......

## ஓய்வுபெற்ற ஆசிரியருக்குப் பாராட்டு

உரும்பராய், புதன்

"ஆசிரியர்கள் சமுதாயம் மிகவும் விழிப்பாய் இருக்க வேண்டும். சமுதாயத்தை முன்னேற்றும் ஆசிரியன் தமது கடமையை உணர்ந்து செய்ய முன்வரவேண்டும் கல்வித்துறையிலும் ஆசிரியத்துறையிலும் ஒரு உன்னத ஸ்தானத்தை வகித்து எமக்கெல்லாம் வழிகாட்டியாய்த் திகழ்ந்தவர் காரைநகர் திரு. க. நல்லதம்பி'' என்று வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின்உபதலைவர்களுள் ஒருவராய் இருந்து ஓய்வு பெற்ற காரைநகர் திரு. க. நல்லதம்பியைப் பாராட்டி வட இலங்கைத் தமிழாசிரியர் சங்கம் எடுத்தவிழாவில் பேசிய அகில இலங்கைத் தமிழாசிரியர் சங்கத்தின் பொதுக்காரியதரிசி திரு. க. இ. குமாரசாமி குறிப்பிட்டார்.

பண்டிதர் ச. பொன்னுத்துரை தலைமையில் யாழ்ப்பாணம் மலாயாகபே மேல்மாடியில் வைபவம் நடைபெற்றது.

ஆசிரியர்சங்கப் பிரமுகர்களான திருவாளர்கள் இ. சுந்தையா, த. இராசேந்திரம், இ. பொ. குமாரசாமி, இ. ஆறுமுகம் ஆகியோர்கள் பாராட்டுரை வழங்கினார்கள்.

—

## பஜனை

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் கந்தசுவாமி கோவில் மஞ்சம் உற்சவம் தொடக்கம் நல்லூர் சிவபூதவராஜ பஜனைச் சபையினர் தொடர்ந்து தீர்த்தம் வரையும் முருகநாம பஜனை நடத்தவிருக்கிறார்கள்.

# நல்லூர் நாற்பது

[ கவிஞர் வி. கந்தவனம் ]

மயிலேறி மனங்கொண்ட வள்ளி யோடு
வாழ்வார்க்கு வாழ்வென்று வாழ்த்தி நல்ல
சுகமான அறிவேற்றித் துணிவு தந்து
துன்பங்கள் தன்புற்றுத் துவண்டு மாள
நயமூறு சிரிப்போடு நற்கண் ணோடு
நல்லூரி லுறைந்திக்கு நாளும் பாயப்
மனூறு நீதந்த பதினே ழாம்நாள்
பனிப்பூச்சப் பரம்மீது பவனி கொண்டாய்!

திசையாவும் வென்றுங்கு திரும்பும் வேளை
திடங்கொண்ட செயல்வீரன் திறமை காட்ட
அசைவெய்தக் கைலாய வழகுக் குன்ற
மடித்தோடிப் பெருக்காகி பழித்த கன்னை
விசைகண்ட அருளுள்ளம் விரலாற் சற்றே
மிதித்துள்ள திறமைமிகு விதித்தே வெல்லை
இசைகேட்டு மகிழ்ந்துள்ளம் இளகும் காட்சி
ஈர்க்கும்பத் தொன்பதினில் எங்கள் நெஞ்சே!

ஆலால முண்டமரர் அல்லல் தீர்த்தோன்
ஆக்கின்ற அடியாரின் அமிழ்தக் குன்றம்
மேலேறி வருங்கோல வேலை பத்தர்
மேல்வாங்கும் கண்ணோடு மெய்ம றந்து
பாலாகத் தேனாகப் பழங்க ளாகப்
பார்த்தொன்றிப் பருகிடுவர் பசி லோங்க
வேலோடு விளங்கின்ற மெய்வி ருந்தாம்
மேலான எழிற்காட்சி வேறெங் குண்டோ?

தங்கமயில் மீதிலொரு தண்டா பாணித்
தனியழகுக் கோலமதைத் தாங்கி வந்தே
பொங்குபுகழ் ஊர்த்தெருவைப் போர்த்தே
ஆர்த்துப்
போற்றியுனைப் பாடியுள்ளம் பொலிவார்
வொன்னுய்
மங்கிவரும் மாலையிலே மாம்ப ழத்தின்
மாண்கதையின் உட்பொருளை மனத்தே
கொள்ள
வெம்முவி திருந்தமிக வினிப்பா வென்றே
இருபத்தி ரண்டதனி யியம்பா நிற்பாய்!

நீண்டவுயர் கோபுரமுன் நின்றே வென்றும்
நீங்காத பேரன்பில் நீந்த மக்கள்
வேண்டவருள் ஆனைமுகன் மாம்ப ழத்தை
வேலான மேலான மெய்நாங் காண
ஆண்டியென மாண்டவெளி லணிக லன்கள்
ஆடைகளும் நீக்கிநில அழகைக் காட்டிப்
பூண்டுகலைக் கோலமும் புகுவை கோயில்
புரியாத பொருளுக்கும் புதல்வ னென்றே!

தேரென்றுங் கருமைவுஞ் சிறந்தே பார்த்துத்
தெரிந்தின்பப் பயனறிந் தினைத்தே பூக்கும்
பேரொன்று பேச்சொன்று மூச்சி மொன்றே
பேசாத வாபெல்லாம் பேசும் நாளை
தேரென்று தேரென்று திருநாள் முன்னுள்
தேங்கிவந் தடியார்கள் திரள்வா ரன்றே
ஊரொன்றும் நல்லூரும் உலக மாகும்
ஊர்டும் வெள்ளத்துக் குவமை யுண்டோ!

(தொடரும்)

## சோவியத் தூதரகமறுப்பு அறிக்கை

கொழும்பு, புதன்

'சோவியத் யூனியனும் இஸ்லாமும்' என்ற நாமம் தாங்கிய ஒரு சிறு பிரசுரம் பற்றி ஸ்தல பத்திரிகைகள் சிலவற்றில் பிரசுரமாகியுள்ள செய்திகளையும் சில நபர்கள் எழுப்பியுள்ள ஆட்சேபனைகளையும் குறித்துக் கொண்டு சோவியத் ஸ்தானிகராலயம் பின்வரும் அறிக்கையை வெளியிடுகிறது:-

மேற் கூறப்பட்டுள்ள சிறு பிரசுரத்தை சோவியத் ஸ்தானியராலயமோ மற்றும் சோவியத் ராஜாங்க அல்லது பொது ஸ்தாபனங்களோ பிரசுரிக்கவோ விநியோகிக்கவோ இல்லை.

இச்சிறு பிரசுரத்தின் உள்ளடக்கமும், ஸ்தானிகர் ஆர். என் நிஷானேவ் அதன் ஆசிரியர் என்று கூறப்படுவதும் கட்டுக்கதையாகும்.

மேற்கூறிய சிறு பிரசுரத்தின் பிரசுரமும் விநியோகமும், இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்குமுடையில் நிலவும் சிநேக உறவுகளுக்கு பங்கம் விளைவிக்கும் நோக்கமுடைய சில வட்டாரங்களின் ஆத்திரமூட்டும் செயல் என்று சோவியத் ஸ்தானிகராலயம் கருதுகிறது.

இப்பொய்ப் பிரசுரத்தை சோவியத் பொதுஸ்தாபனமான நொவோஸ்தி பிரெஸ் ஏஜன்ஸியின் நாமத்தில் விநியோகம் செய்திருக்கும் விஷமச் செயல், சமயம் பற்றிய சோவியத் அரசின் கொள்கைக்கு அபகீர்த்தி விளைவிப்பதையும், சோவியத் யூனியனில் மனச்சாட்சி சுதந்திரமும் வழிபாடு சுதந்திரமும் பற்றிய உண்மைநிலைமையை பிழையாக திருத்திக் காட்டுவதையுமே நோக்கமாகக் கொண்டதாகும். —

மாரீசன்கூடலில்

### மந்தைகளின் ஆயர்

யாழ்ப்பாணம், வியா

இம்மாதம் 7-ம் திகதி மாரீசன் கூடலுக்கு வருகை தந்த ஆயர் அன்ரனிக்கு இப்பகுதி மக்கள் பெரும் வரவேற்பளித்தனர். மாதர்கள் வரவேற்புப்பா இசைத்தனர். ஆசிரியர் ஆ. சவரிப்பிள்ளை வாழ்த்துரை வழங்க செல். ச. ஆ. காந்தி வரவேற்புரை நிகழ்த்தினர். இப்பகுதி கத்தோலிக்க மக்களின் அவல நிலைமையும் ஆயர் அன்ரனிக்கு சுட்டிக் காட்டப்பட்டது. ஆயர் அவர்களின் நன்றி தெரிவித்துப் பேசினர். கட்டளைக் குரவர் லெயோன் விழாவை நடத்தினர்.

### 190 கனிஷ்ட மாதிரி பாடசாலைகள்

கோட்டை, புதன்

கல்வியமைச்சு 190 கனிஷ்ட மாதிரிப்பாடசாலைகளை நிறுவுவதற்குத் தீர்மானித்துள்ளது.

நாடுபூராவும் கல்விமுறையைச் சீர்செய்வதற்கே இந்தத் தீர்மானத்தை கல்வி அமைச்சு எடுத்துள்ளது.

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### வியா. 12—8—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீ அலை 61 மீ

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 இஸ்லாமிய நற்சிந்தனை 6-20 துதிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00 இஸ்லாமியகீதம்.

844 மீ அலை 49 மீ

பகல் 12-00 திரைகானம், 1-00 குதம்ப நிகழ்ச்சி.

844 மீ. அலை 61 மீ.

மாலை 4-30 கல்வி மறுஒலிபரப்பு, 5-00 சிறுவர்பாடல்கள், 5-15 மாணவர் மன்றம், 5-45 கல்விச் சேவை.

இரவு 6-15 இசைப் பயிற்சி 6-30 நாட்டுப் பாடல்கள், 6-45 வீட்டுவைத்தியம், 7-00 தமிழ்மூலம் சிங்களம்., 7-30 வயலின் 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 நாடகம், 10-00 நேயர்விருப்பம், 10-30 செய்தித் தொகுப்பு.

## மிருதங்க அரங்கேற்றம்

யாழ்ப்பாணம், வியாழன்

யாழ்ப்பாணம் இராசாவின் தோட்டத்தைச்சேர்ந்த திரு வி கிருஷ்ண பிள்ளையின் மிருதங்க அரங்கேற்றம் நேற்று முன்தினம் யாழ் நகரில் நடைபெற்றது. திரு க சுப்பிரமணியம் தலைமையில் அரங்கேற்றம் நிகழ்ந்தது. திரு ஜே அந்தோனிப்பிள்ளை உட்படப்பலர் உரையாற்றினர்.

ஆசிரியர் இடமாற்றத்தை

## சங்கத்துடன் கலந்தாலோசிக்க வேண்டும்

கோட்டை, புதன்

'எம் பிக்களின் விருப்பத்தின் பேரில் ஆசிரியர்களை இடமாற்றம் செய்யும் பொழுது இறுதி முடிவை கல்வியமைச்சு நாட்டின் பெரிய ஆசிரியர் சங்கமான ஜாதிகுரு சங்கத்துடன் கலந்தாலோசித்து எடுக்க வேண்டும்' என ஜாதிகுரு சங்கம் அமைச்சைக் கோரியுள்ளது.

மேற்படி சங்கம் மேலும் இதுவிடயமாகக் கருத்துத் தெரிவிக்கையில் 'எம். பிக்களிடம் இடமாற்றம் செய்யப்படவேண்டிய ஆசிரியர்கள் பற்றிக் கேட்கப்படலாம். எம் பிக்கள் கல்வியமைச்சுக்கு இடமாற்றவேண்டிய ஆசிரியர் பட்டியலைக் கொடுக்கலாம் ஆனால் இறுதி முடிவை எங்களுடனேயே கலந்தாலோசித்து முடிவெடுக்க வேண்டும் எனத் தெரிவித்துள்ளது.

......

## அன்னதானமும் சொற்பொழிவும்

அக்கைப்பிட்டி, புதன்

வேலணை பெருங்குளம் முத்துமாரி அம்மன் ஆலய தேர் உற்சவ விழாவை முன்னிட்டு வேலணை நால்வர் மடத்தில் அன்று பகல் மடாதிபதி திரு. வா க. செல்லப்பா சுவாமிகள் தலைமையில் நாற்றுக்கணக்கான பத்தர்களுக்கு அன்னதானமும், கந்தபுராண சிறப்புச் சொற்பொழிவுகளும் இடம் பெற்றன.

கள்ளுக்கடை பிரச்னை

# சென்னை நகரசபையில் அங்கத்தவர் கைகலப்பு

சென்னை, ஆக. 11

சென்னை மாநகரசபைக் கூட்டம் நேற்றுக் குழப்பத்தில் முடிந்தது. அங்கத்தவர்களுக்கிடையில் ஏற்பட்ட கைகலப்பின் பின்னர் கூட்டம் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டது.

சென்னையில் கள்ளுக்கடைகளைத் திறக்க வேண்டாமென தமிழ்நாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்ளும் தீர்மானம் ஒன்றைப் பற்றி ஆலோசிப்பதற்காக இக் கூட்டம் விசேஷமாக அழைக்கப்பட்டிருந்தது

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே காலஞ்சென்ற நடிகர் கே ஆர். ராமசாமியின் மறைவுக்கு அனுதாபம் தெரிவிப்பதற்கான பிரேரணை முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என திமு க. உறுப்பினர்கள் கோரினார்கள். ஆனால் கள்ளுக்கடை பற்றிய தங்கள் தீர்மானமே முதலில் எடுத்துக் கொள்ள வேண்டும் என ஸ்தாபன காங்கிரஸ் உறுப்பினர்கள் வலியுறுத்தினார்கள். இதனால் குழப்பமும் கைகலப்பும் ஏற்பட்டது.

## தலைவர் பதவி கம்யூனிஸ்ட் கட்சியிடம்

யாழ்ப்பாணம், வியா:

அகில இலங்கை அரசாங்க லிகிதர் சேவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையின் நிர்வாகத்தைக் கைப்பற்றுவதற்கு மாஸ்கோசார்பு கம்யூனிஸ்ட் கட்சிக்கும் லங்கா சமசமாஜக் கட்சிக்குமிடையில் நடைபெற்ற போராட்டத்தில் சங்கத்தின் தலைவர் பதவி மட்டும் கம்யூனிஸ்ட் கட்சியிடம் போய்ச் சேர்ந்திருக்கிறது. இதர பதவிகளை லங்கா சமசமாஜக்கட்சியைப் பற்றிக் கொண்டிருக்கிறது.

அகில இலங்கை அரசாங்க லிகிதர்சேவைச்சங்க யாழ்ப்பாணக் கிளையின் ஐம்பத்தி மூன்றாவதாண்டுக் கூட்டம் யாழ்ப்பாணம் வை எம் ஸி ஏ மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

முன்னர் இச் சங்கத்தின் தலைவராகவிருந்த திரு ஈ. சிவசோதியும் மாஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த திரு வி. செல்வரத்தினமும் தலைவர் பதவிக்குப் போட்டியிட்டதில் திரு. செல்வரத்தினம் நான்கு அதிகப்படியான வாக்குகளால் தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

உபதலைவர்கள், காரியதரிசி, உபகாரியதரிசி தனாதிகாரி பதவிகள் முன்னர் போல் லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தவர்களுக்கே இம்முறையும் கிடைத்துள்ளன.

## உள்ளூராட்சி ஊழியருக்கு சலுகை

கோட்டை, புதன்

அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சலுகைகளை உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் வழங்குவது பற்றி ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக நியமிக்கப்பட்ட குழு நேற்றுத் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

உள்ளூராட்சி ஊழியர்களுக்கும் அரசியல்தொழிற் சங்க உரிமைகள் வழங்கப்படவேண்டும் என்று அக்குழு சிபார்சு செய்துள்ளது, மந்திரிசபையின் அங்கீகாரத்துக்காக இது சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சர் கூறினார்.

## ஒருபாடசாலையில் ஒரேஒரு ஆசிரியர்

யாழ்ப்பாணம், வியா

அனலைதீவு தெற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஒரேஒரு ஆசிரியர் மட்டுமே கடமையாற்றுகிறார். 127 மாணவர்களைக் கொண்ட இப் பாடசாலையில் 5 வகுப்புகள் இருக்கின்றன குறிப்பிட்ட ஆசிரியர் 5 வகுப்புகளையும் தனியே கவனிக்க வேண்டியிருப்பதுடன் தலைமை ஆசிரியரின் கடமைகளையும் பார்க்க வேண்டிய நிலையில் இருக்கிறார். இதனால் மாணவரின் கல்விநிலை மிகவும் பாதித்து வருவதாக மேற்படி பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்கம் வடமாநில கல்வி அதிபதியைப் பேட்டிகண்டு சுட்டிக்காட்டியுள்ளது.

## ஜி. சி. ஈ, உயர்தர மாணவர் அவதி

யாழ்ப்பாணம், வியா

நெடுந்தீவு அரசினர் மாவித்தியாலயத்தில் ஜி. சி. ஈ. (உயர்தரம்) வகுப்பில் உள்ள மாணவர்கள் ஆசிரியர்கள் இன்றிக் கஷ்டப்படுகின்றனர். இது சம்பந்தமாக உடன் நடவடிக்கை எடுக்குமாறு நெடுந்தீவு முன்னேற்றக்கழகம் வடமாநிலக் கல்வி அதிபரைக் கேட்டுள்ளது.

இங்குள்ள மாணவர்கள் இம் மாவித்தியாலயத்தில் மாத்திரமே உயர்கல்வி கற்பதற்கான வசதிகள் இருக்கின்றது இந்நிலையில் குறிப்பிட்ட வகுப்பு மாணவர்கள் ஆசிரியர்கள் இன்றி கஷ்டமுறுவதைவிட வகுப்பையே மூடிவிடுவது சிறந்தது என்று முன்னேற்றக்கழகம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது இதன் பிரதி தீவுப்பகுதி எம் பி.க்கும் அனுப்பப்பட்டுள்ளது.

## நல்லையில் இன்று

யாழ்ப்பாணம், வியாழன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் திருப்புகழ் மண்டபத்தில் இரவு 9-30 மணிக்கு நடைபெறும் திருவிளையாடல் விரிவுரையில் "உலவாக் கோட்டை உதவியது" பற்றி ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள் கதாகாலட்சேஷபம் செய்வார்.

## நல்லூரில் சிட்டிழுப்பு நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வியாழன்

தேசிய லொத்தர் சபையின் 359வது சீட்டிழுப்பு இம்மாதம் 18ந் திகதி மாலை நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் வீதியில் நடைபெறும்.

முதலாவது அதிர்ஷ்டச் சீட்டை நல்லூர்த்தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு சி அருளம்பலமும் இரண்டாவது அதிர்ஷ்டச் சீட்டை யாழ் மாவட்ட அரசாங்க அதிபர் திரு விமல் அமரசேகராவும் மூன்றாவது அதிர்ஷ்டச் சீட்டை நல்லூர் கிராமசபைத் தலைவரும் இழுப்பார்கள்.

இவ் வைபவத்தில் தேசியக்கொடியை யாழ் நகர மேயர் திரு அல்பிரட்துரையப்பா ஏற்றிவைப்பார். இலங்கைப் புகையிலைக் கம்பனியின் அனுசரணையுடன் நடைபெறும் இவ் வைபவத்தில் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

## மணிவாக்கு

தன் உபயோகத்துக்கும் அவசியத்துக்கும் அறிந்து கொள்ள வேண்டிய விஷயங்களை அறிந்து கொள்ளாதவன் வேறு எவற்றை அறிந்திருந்தாலும் அறிவில்லாதவனே ஆவான். — டிக்கட்ஸன்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாத்வீகமாண விரோதிகிருத வருஷம் ஆடி மாதம் 27-ந் திகதி (12-8-71)


# நல்லூரும் நூல் நிலையமும்

நல்லூர் நாவலர் நிலையத்தில் அமைக்கப் பெறும் நூல்நிலையத்தின் திறப்புவிழா இன்று மாலை நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் நடைபெறுகிறது. நாவலர் நூல்நிலையம் அமைக்கும் சிறந்த பணிக்கு பொதுமக்களின் உதவியும் ஒத்துழைப்பும் பெருமளவில் கிடைக்குமென எதிர்பார்க்கலாம்.

நாவலருக்குச் சிலை எடுத்ததுடனும் நாவலர் மணிமண்டபம் கட்டியதுடனும் நாவலர்சபையின் பணியோ, சைவத் தமிழ்மக்களின் நன்றிக்கடனோ முடிந்து விடவில்லை; நாவலர் சபையும் சைவ, தமிழ்மக்களும் செய்ய வேண்டிய பெரும் பணிகள் இன்னும் உளவென என்பதை இதே பத்தியில் நாம் இதற்கு முன்னரும் குறிப்பிட்டிருந்தோம். நாவலர் நூல் நிலையம் அமைப்பது நாவலர்சபை குறிக்கோள்களில் ஒன்றாகும். இதை நிறைவேற்றுவதற்கு இன்று முதல் முயற்சி மேற்கொள்ளப் படுகிறது. சரியான சமயத்தில் சரியான பணியை மேற்கொள்ளும் நாவலர் சபை பாராட்டுக்குரியது.

ஆலயங்களும் அதனைச் சார்ந்த இடங்களும் தூய்மையாகவும் புனிதமாகவும் விளங்க வேண்டுமென்றும் ஆலயத்துக்குச் செல்வோரும் ஆலய வீதிகளும் சுத்தமாகவும் தூய்மையாகவும் இருக்க வேண்டுமென்றும் வற்புறுத்தி வந்ததுடனில்லாது தூய்மை, ஒழுக்கம், ஆசாரம் என்பனவற்றுக்கு வாழ்ந்து காட்டி இலக்கணம் வகுத்தவர் நாவலர் பெருமான். பொதுவாக ஆலயங்கள் எப்படியிருக்க வேண்டுமெனக் கூறிய அவர் நல்லூரில் அதற்காகப் பெரும் கண்டனக் கணையே தொடுத்தவர்.

மக்கள் கூட்டம் அதிகரிக்குமிடங்களில் அவர்களின் கவனத்தை வேறு திசையில் திருப்பி அவர்களால் இலாபமடைய முயற்சி செய்வது பொதுவாக மனித இயல்பு. நல்லூர்த் திருவிழாவுக்கு வரும் மக்கள் தொகை வருடா வருடம் அதிகரித்து வருகிறது. இதனால் கடைகள், காட்சிகள் என்ற ஏற்பாடுகளும் அதிகரித்து வருகின்றன. கடைகளும் காட்சிகளும் அதிகரித்து வருவதால் அங்கு வருபவர்களில் பலரும் சந்தைக்கோ, களியாட்ட விழாவுக்கோ வருபவர்கள்போலக் காட்சியளிப்பது அதிகரித்து வருவதிலும் வியப்பில்லை. இதனால்தான் நல்லூர்த் திருவிழா களியாட்ட விழாவாக மாறிவிடும் ஆபத்து ஏற்படுகிறது' என்று பலரும் கவலையுடன் வேண்டுகோள் விடுத்து வருகின்றனர். நல்லவர்களின் இந்த வேண்டுகோள் வீண்போக முடியாது.

நாவலர்பெருமான் இன்றும் நல்லூரில் இருக்கிறார். நாவலர் மணிமண்டபத்தில் அமைதியாக அமர்ந்து ஆலய வீதியை அவதானித்துக் கொண்டிருக்கிறாரென்றே சொல்ல வேண்டும். நாவலர் நூல் நிலையம் அமைக்கும் பணியின் மூலம் நாவலர்சபை பெருந் தொண்டாற்ற முடியும்.

(1) நாவலர் பெருமானால் இயற்றப்பெற்று முதற்பதிப்பாக அச்சிடப்பெற்ற நூல்கள்.

(2) நாவலர் பெருமானைப்பற்றி ஏனையோர் எழுதிய நூல்கள்.

(3) சைவசித்தாந்த நூல்கள், ஆகமங்கள், திருமுறைகள், புராணங்கள்.

(4) இலக்கிய நூல்கள்.

(5) இலக்கண நூல்கள்.

ஆகிய தலைப்புக்களில் அடங்கும் நூல்களை நாவலர் நூல்நிலையத்துக்கு அன்பளிப்பாகக் கொடுத்து தமது பணி சிறப்புற நிறைவேற உதவும்படி நாவலர் சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

நாவலர் நூல்நிலையம் வெறும் நூல்நிலையமாக மட்டும் இராது ஆராய்ச்சியாளருக்கும் பயன்பட வேண்டும்;

நாவலர் சபையின் பணி நீண்டகாலத் திட்டம் கொண்ட புதியதொரு நல்ல சமுதாயத்தை உருவாக்கும் சிறந்த பணியாகும். இந்தப் பணிக்கு சைவத் தமிழ் மக்கள் மட்டுமல்ல பொதுமக்கள் அனைவரினதும் ஆதரவும் உதவியும் ஒத்துழைப்பும் தேவை.


## யாழ் / நெல்லியடி
## மத்திய மகாவித்தியாலயம்

11-ம் தர கலை விஞ்ஞான வகுப்புக்களுக்கான காலி இடங்கள் உள்ளன. விரும்புவோர் 16-8-71க்கு முன் மனுப்பண்ணுக. விஞ்ஞான மாணவர் எப்பகுதியிற் சேரவிரும்புகின்றனர் என மனுப்பத்திரத்தில் குறிப்பிடுக.

புகுமுகப் பரீட்சை 30-8-71 முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்;

க. சிவசிதம்பரம்
அதிபர்
2959 10-8-71


நல்லூர்

## தேர்த் திருவிழாவுக்கு விசேட ரயில்

கோட்டை, புதன்

நல்லூர்க் கந்தசுவாமி கோவில் தேர்த்திருவிழாவை முன்னிட்டு பிரயாணிகள் வசதிக்காக கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு விசேஷ குளிரூட்டப்பட்ட ஆடம்பர ரயில் சேவை ஒன்றை விடுவதற்குப் புகையிரதப் பகுதி ஒழுங்குகள் செய்து வருகின்றது. இந்த ரயில் 18-ந் திகதி மாலை 7-30 மணிக்கு கொழும்பு கோட்டையிலிருந்து புறப்படும். இதே ரயில் 19-ந் திகதி பிற்பகல் 1-30 மணிக்கு யாழ்ப்பாணத்திலிருந்து புறப்பட்டு கொழும்புக் கோட்டைக்குச் செல்லும்.

## 358 வது சுவீப்

கொழும்பு, புதன்

358வது இலங்கை தேசிய சுவீப் சீட்டிழுப்பு இம்மாதம் 12ம் திகதி மாலை கண்டி போகம்பரை மைதானத்தில் நடைபெறும்.

## சுவீப் திருத்தம்

கொழும்பு, புதன்

357வது தேசிய சுவீப் முடிவுகளில் சில தவறுகள் ஏற்பட்டிருப்பதாக தேசிய லொத்தர் சபை அறிவிக்கிறது.

07 A 0833 26 G 0088 34 P 0046 என்ற இலக்கங்களையுடைய டிக்கட்டுகள் 07 A 0836 36 G 0068 34 P 0049 என்றிருக்க வேண்டும்.

## மாலைகளல்ல......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சொன்னார்.

யாழ்ப்பாணத் தொகுதி ஆசிமன்ற உறுப்பினர் திரு சி எக்ஸ் மார்ட்டின் நேற்று நண்பகல் பலாலி விமான நிலையத்தில் வந்திறங்கிய போது அவரது ஆதரவாளர்கள் அவருக்கு மகத்தான வரவேற்பளித்தனர். தேர்தல் ஆட்சேப அப்பீல் மனு சுப்ரீம் கோர்ட்டில் தள்ளுபடி செய்யப்பட்டு திரு மார்ட்டினின் தெரிவு ஊர்ஜிதப் படுத்தப்பட்டதற்குப் பின்னர் திரு மார்ட்டின் நேற்றுத்தான் யாழ்ப்பாணத்துக்கு முதல்தடவையாக வந்துசேர்ந்தார். அரசியல் நிர்ணய சபைக் கூட்ட நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வது சம்பந்தமாக தமிழரசுக் கட்சிக்கும் திரு மார்ட்டினுக்கும் கருத்துவேற்றுமை ஏற்பட்டு திரு மார்ட்டின் தமிழரசுக்கட்சியிலிருந்து விலக்கப்பட்டபின் அவர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததும் நேற்றுத்தான் முதல் தடவையாகும். பலாலி விமான நிலையத்தில் அவர் வந்திறங்கியதும் அவருடைய முகத்தை மறைக்குமளவுக்கு மாலைகள் சூட்டப்பட்டுவரவேற்பளிக்கப்பட்டது. அங்கு திரண்டுவந்து தம்மைவரவேற்றவர்களுக்கு திரு. மார்ட்டின் தமது சார்பிலும் தமது மனைவியின் சார்பிலும் நன்றிதெரிவித்தார்.

பலாலி விமான நிலையத்திலிருந்து திரு. மார்ட்டின் தம்பதிகள் கார் பவனியாக அவரது இல்லத்துக்கு அழைத்து வரப்பட்டனர். திரு. மார்ட்டினுடன் முன்னாள் யாழ் நகரமேயர் திரு. சி. எஸ் துரைராஜா அமர்ந்திருந்தார். வரவேற்பில் பல்வேறு கட்சிகளையும் சேர்ந்த பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.


## பிரிவுபசார விழா

யாழ்/வேம்படி மகளிர் கல்லூரி
முன்னைநாள் அதிபர்

### செல்வி மேபல் தம்பையா எம். ஏ.

14-8-71 மாலை 4-30 மணி வேம்படி கல்லூரி மண்டபம்

பெற்றோர் ஆசிரியர், பழைய மாணவியர், அபிமானிகள் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். 2960


# 15 புதிய அரசாங்க கைத்தொழில் நிலையங்கள்

## நிறுவப்படுமென அமைச்சர் தகவல்

செங்கலடி, புதன்

பதினைந்து அரசாங்க கைத்தொழில் நிலையங்களை விரைவில் நிருவவிருப்பதாக கைத்தொழில் விஞ்ஞான அமைச்சர் திரு. டி பி சுபசிங்கா தெரிவித்தார்

புல்மூட்டை வேலைத்தலத்தில் நடந்த வைபவமொன்றில் உரையாற்றிய அவர் மேலும், கைத்தொழில் விஸ்தரிப்பு நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு உதவிசெய்யும். ஏற்கனவே நாட்டின் அபிவிருத்திக்குக் கைத்தொழில் விருத்தி உதவிசெய்துள்ளது என்றார்.

புல்மூட்டை இல்மனைட் தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்பட்ட 23 ஆயிரத்து 400 தொன் இல்மனைட்டை ஜப்பானுக்கு அனுப்பியதில் 13 லட்சம் ரூபா வருமானம் இலங்கைக்குக் கிடைத்துள்ளது

இலங்கை—இந்திய

# உறவில் தமிழ்நாடு தலைவர்கள் திருப்தி

— அஸீஸ்

கோட்டை, புதன்

இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையேயுள்ள உறவுகளில் ஏற்பட்டுள்ள சூழல் மாற்றத்தை தமிழ்நாட்டுத் தலைவர்கள் வரவேற்பதாக ஜனநாயகத் தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் நியமன எம். பியுமான திரு. ஏ அசீஸ் தெரிவித்தார்

திரு. அசீஸ் தமிழ்நாடு முதலமைச்சர் திரு மு கருணாநிதியுடனும் மற்றும் தலைவர்களுடனும் இலங்கை இந்திய தோட்டத் தொழிலாளர் நிலைமைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்திய பின் இலங்கை திரும்பியுள்ளார்

தோட்டத் தொழிலாளரின் தற்போதைய நிலைமை பற்றியும் இந்தியா திரும்பும் இந்திய வம்சாவழியினர் பற்றியும் ஸ்ரீமா-சாஸ்திரி ஒப்பந்தத்தை எவ்வாறு சரியான முறையில் இலங்கை அரசாங்கம் செயல்படுத்தி வருகிறது என்பதையும் திரு. கருணாநிதிக்கு திரு. அசீஸ் எடுத்துச் சொன்னார்

## வெளி மாணவருக்கு வேறு பரீட்சை?

பருத்தித்துறை புதன்

இலங்கைப் பல்கலைக் கழகம் இவ்வாண்டு தொடக்கம் சட்டப்பகுதியிலுள்ள பல்கலைக்கழக மாணவருக்கும் வெளிமாணவருக்கும் வெவ்வேறு பரீட்சைகள் நடாத்தவிருப்பதாகத் தெரிகிறது. உள்மாணவருக்கான இறுதியாண்டுப் பரீட்சை நவம்பர் 23ம் திகதி நடைபெறவிருப்பதாகவும். வெளிமாணவருக்கு 1972ம் ஆண்டு மார்ச் மாதமளவில் நடாத்தப்பட விருப்பதாகவும் தெரிகிறது.

அநேகமாக வெளிநாடுகளுக்கு உயர்கல்வி காரணமாகச் சென்ற சகல விரிவுரையாளரும் இலங்கை திரும்பி விட்டதால், இரு பரீட்சைகளை நடாத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியிருப்பதாகத் தெரிகிறது.

## வழி தவறும் வனவிலங்குகளை பாதுகாக்கத் திட்டம்

கோட்டை, புதன்

வழிதவறி நடக்கும் வனவிலங்குகளை அவற்றின் இனங்களுடன் சேர்ப்பதற்காக வனவிலங்கு பாதுகாப்பு இலாகா நடவடிக்கை எடுத்து வருகிறது. இப்படி வழி தவறி நடக்கும் வனவிலங்குகளை பாதுகாப்பதற்காக பாதுகாப்புப் பிரதேசங்கள் அமைக்கப்பட்டு அப்பிரதேசங்களில் இந்த வனவிலங்குகளைச் சேர்க்கவும் அங்கிருந்து பின் அவற்றை அவற்றின் இனங்களுடன் சேர்க்கவும் இந்த வனவிலங்குகளை பொறிவைத்து வேட்டை ஆடுவதைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக வனவிலங்கு பாதுகாப்புத் திணைக்களத்தைச் சேர்ந்த அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## செனட்டர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னிப் பேச்சை நிகழ்த்தினார். அவர் தனது கன்னிப் பேச்சின் பொழுது கூறியதாவது:

ஞாயிறு விடுமுறைத்திட்டத்தைப் பொதுவாகத் தொழிலாளர்கள் வரவேற்கின்றனர். நான் நீண்டகாலம் தொழிற்சங்கவாதியாக இருப்பதினால் இந்த உண்மையை என்னால் சொல்லமுடிகிறது. இந்த புதிய திட்டத்தை ஸ்ரீலங்கா ஜாதிக சங்கமயாவிலுள்ள 50 ஆயிரம் ஆசிரியர்கள் வரவேற்கின்றனர் என்றார்.

செனட்சபை மீண்டும் இம்மாதம் 24-ம் திகதி கூடுகிறது.

### 5-ம் 22ம் விடுமுறை

ஞாயிறு விடுமுறை சட்டமூலம் செனட்டில் இறுதி வாக்கெடுப்பு நடைபெறுமுன் இம்மாதம் 15, 22ம் திகதிகளுக்கான ஞாயிறு விடுமுறைகள் விசேட வர்த்தமானி மூலம் அறிவிக்கப்படும்.


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971-ம் ஆண்டுஆகஸ்ட்மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப் பட்டது.